**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**
KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW8 (PW8) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 09.10.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.கோபால்ரெட்டி | Father Name | : | திரு.சென்னாரெட்டி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused A1-A3 present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் பொம்மண்டப்பள்ளியில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். எனக்கு ஒரு பெண் பிள்ளை . என் வீட்டின் எதிர் வீடு நாராயணசாமி என்பவர் வீடு. நாராயணசாமி மளிகை கடை வைத்திருக்கிறார். நாராயணசாமி வீடு 2 தளங்கள் மற்றும் 1/2 தளம் உள்ளது. முருகேஷ் நாராயணசாமி வீட்டில் 3 வருடம் குடியிருந்தார். முருகேஷ் உடன் அவர் மனைவி மற்றும் குழந்தைகள் இருந்தார்கள். முருகேஷ் டாடா ஏஸ் வாகனம் வைத்திருந்தார். வேறு என்ன தொழில் செய்து வந்தார் என்ற விவரம் தெரியாது. சுமார் 5-6 வருடங்களுக்கு முன்பாக முருகேஷ் இறந்துவிட்டார். இரயில்வே ரோட்டில் முருகேஷ் இறந்துவிட்டதாக சொன்னார்கள் . முருகேஷ் என்ன பிரச்சனையில் இறந்துவிட்டார் என்பது தெரியாது . முருகேஷ் இறப்பதற்கு முன்பாக எந்த பிரச்சனையும் அந்த இடத்தில் ஏற்படவில்லை. முருகேஷ்க்கு என்ன பிரச்சனை இருந்தது என்பது பற்றி

எனக்கு தெரியாது. போலீசார் வந்து விசாரித்தார்கள் , விசாரித்தபோது என்ன பிரச்சனை என்று தெரியாது என்று சொன்னேன்.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையின்போது ஜனவரி 01ம் தேதி முருகேஷ் மற்றும் அவர் சித்தப்பா மகன் கோபால் என்பவருக்கு தகராறு ஏற்பட்டது என்று நான் சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் அது தவறு . கடந்த 11.08.2012 தேதி இரவு 10.30 மணிக்கு எங்கள் வீட்டிற்கு முன்பாக உள்ள காலி இடத்தில் சத்தம் வந்தது என்றும் , அப்போது கோபால் முருகேஷ் மற்றும் இரண்டு பேர்கள் ஒருவருக்கு ஒருவர் தகராறு செய்துக்கொண்டு இருந்தார்கள் என்றும் , நான் வழக்கம் போல் சண்டை என்று சொல்லி வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும், மறுநாள் காலை 8.00 மணிக்கு முருகேஷ் ஓசூர் ஆனைக்கல் போகும் இரயில் பாதையில் இறந்துகிடப்பதாக கேள்விப்பட்டு போய் பார்த்தேன் என்றும் , செந்தில் முருகன் வோர்க் ஷாப் அருகே காலி நிலத்தில் அதிகமான இரத்தம் தோய்ந்து கிடந்தது என்றும் , கோபாலும் அவர் நண்பர்களும் சேர்ந்து முருகேஷ்சை கொலை செய்து விட்டு பிணத்தை எடுத்து போய் இரயில்வே பாதையில் போட்டுள்ளதாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி முருகேஷ் எப்படி இறந்தார் என்று தெரியாது

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்று சொன்னால் சரிதான். போலீசார் என்ன எழுதிக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் எனக்கு தமிழ் எழுதப்படிக்க வராது

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2025.10.09 16:50:50 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW7 (PW7) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 09.10.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.நாராயணசாமி | Father Name | : | திரு.ஆஞ்ஜப்பா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused : A1 to A3 present.**

**முதல் விசாரணை:**

நான் பொம்மண்டப்பள்ளி மளிகை கடை வைத்திருக்கிறேன் . எனக்கு மூன்று வீடுகள் உள்ளது . முருகேஷ் என் வீட்டின் முதல் மாடியில் குடியிருந்தார். முருகேஷ் உடன் அவருடைய மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளும் வசித்து வந்தார்கள் . முருகேஷ் வாட்டர் சர்வீஸ் (Water Service) கடை நடத்தி வந்தார். நான் மளிகை கடை வைத்திருக்கிறேன். சுமார் 6, 7 வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் எங்கள் உறவினர் திருமணத்திற்காக நான் மாலூர் போய் இருந்தேன் . சாயங்காலம் 4.00 மணிக்கு தான் நான் திருப்பி வைத்தேன் . நான் வீட்டிற்கு வந்தபோது முருகேஷ் தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது . இது சம்பந்தமாக அன்றைய தினம் சாயங்காலம் போலீசார் விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையின்போது ஜனவரி 01ம் தேதி முருகேஷ் மற்றும் அவர் சித்தப்பா மகன் கோபால் என்பவருக்கு தகராறு ஏற்பட்டது என்று நான் சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் அது தவறு . கடந்த 11.08.2012 தேதி இரவு 10.30 மணிக்கு எங்கள் வீட்டிற்கு முன்பாக உள்ள காலி இடத்தில் சத்தம் வந்தது என்றும் , அப்போது கோபால் முருகேஷ் மற்றும் இரண்டு பேர்கள் ஒருவருக்கு ஒருவர் தகராறு செய்துக்கொண்டு இருந்தார்கள் என்றும் , நான் வழக்கம் போல் சண்டை என்று சொல்லி வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும், மறுநாள் காலை 8.00 மணிக்கு முருகேஷ் ஒசூர் ஆனைக்கல் போகும் இரயில் பாதையில் இறந்துகிடப்பதாக கேள்விப்பட்டு போய் பார்த்தேன் என்றும் , செந்தில் முருகன் Work Shop அருகே காலி நிலத்தில் அதிகமான இரத்தம் தோய்ந்து கிடந்தது என்றும் , கோபாலும் அவர் நண்பர்களும் சேர்ந்து முருகேஷ்சை கொலை செய்து விட்டு பிணத்தை எடுத்து போய் இரயில்வே பாதையில் போட்டுள்ளதாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி முருகேஷ் தற்கொலை செய்துக்கொண்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்று சொன்னால் அது தவறு எழுதப்படிக்க தெரியும். போலீஸ் விசாரணையில் அவர்கள் என்ன எழுதிக்கொண்டார்கள் என்பதை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் என் முன்னால் ஏதும் எழுதவில்லை.

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2025.10.09 16:50:57 +0530